உ
சிவமயம்

gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புக. ருஅ] யாழ்ப்பாணம்—விய வருஷ ஆவணிமீ உருவ (1946 செப்டெம்பர் 10 செவ்வாய்க்கிழமை) [இல சஅ

## இந்தியாவின் ஆத்திரம்

### இலங்கைக்கு விரோதமாக நேரு அரசாங்கம் என்ன செய்யும்?

இன்று இந்தியாவில் ஜனப்பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் பொறுப்புள்ள அரசாங்கம் இருக்கிறது. இதுகாறும் இருந்த அரசாங்கங்கள் கையாண்ட வழவழாக் கொள்கையை இந்த அரசாங்கம் கையாளமாட்டாது என்பதைத் திடமாக நம்பலாகும். அதிலும் பண்டித ஜவஹர்லால் வெளிநாட்டு விவகாரங்களைப் பொறுப்பேற்று உள்ளவர். எனவே வெளிநாடுகளில் வசிக்கும் இந்திய மக்கள் விஷயமாக, அதிக சிரத்தை இந்திய அரசாங்கத்தாரால் இனிஎடுக்கப்படும் எனக் காத்திருக்கலாகும்.

இப்போது தென்னாபிரிக்காவிலே இந்தியர்க்கு விளைக்கப்படும் அநீதி, ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் விவாதிக்கப்படப் போகிறது. அதன் பலாபலன்கள் என்னவாக முடியும் என்பதை இந்தியா அவதானித்து, இலங்கைமீது நடவடிக்கை எடுக்கத் துடிதுடித்துக் கொண்டு நிற்கிறது எனச் சென்னையிலிருந்துவந்த செய்தி ஒன்று கூறுகிறது

இப்போது சிலகாலமாக, இலங்கை அரசாங்கம், இந்தியர்க்கு விரோதமாக ஆற்றிவரும் செயல்கள் இந்தியாவில் உள்ளவர்களுக்குப் பெரும் ஆத்திரத்தைக் கொடுத்திருக்கிறது. இப்போது இலங்கையிலேயுள்ள துணிப் பஞ்சம், உணவுப் பஞ்சம், என்பவற்றை யிட்டு, இந்தியா இப்போதுள்ள நிலைமையில் அநுதாபங் கொள்ளமாட்டாது. நேர்மாறாக, கீழ்நாடுகளுக்கு உணவு அனுப்பும் நிர்வாகசபையிலே, இந்தியா இலங்கைக்கு விரோதமாகக் கருமம்ஆற்றி, இலங்கைக்கு உணவுப் பொருள்களோ, துணிகளோ அனுப்பக் கூடாது என்று வாதாடும் என்பதற்கான உற்பாதங்கள் தோன்றுகின்றன.

இலங்கை வழிந்குவந்து இந்தியர்க்கு நீதிசெலுத்தாத வரையில் இலங்கையுடன் கொண்டுள்ள சகல வர்த்தகத் தொடர்புகளையும் நீக்கப் பண்டிதர்நேரு நிச்சயித்தால் நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை.

ஆரம்பத்தில் இலங்கைக்குத் துணிகள் அனுப்புவதை இந்தியா தடுக்குமென்று சொல்லப்படுகிறது.

## மௌனம் கலகநாஸ்தி!

### என்கிறார் செனனாயக்கா

சென்ற வியாழக்கிழமை கூடிய அரசாங்கசபைக் கூட்டத்தில் விவசாயப்பகுதி சம்பந்தமான மானியங்கள் விவாதத்துக்கு வந்தபோது இதுவரை விவசாய மந்திரி செய்துள்ள வேலைகளை மிஸ்ரர் தகநாயக்கா கண்டித்தார்.

இந்த நாட்டிலேயுள்ள மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை ஆக்கும் முயற்சிகளைச் செய்ய செனனாயக்கா தவறிவிட்டார். சென்ற சில வருடங்களுக்கிடையில் இந்த செனனாயக்கா 25கோடிருபா செலவு செய்தும் ஜனங்கள் இன்னும் பட்டினி கிடக்கிறார்கள். இது மிகவும் கேவலமான, மோசமான நிலைமை" என்று மிஸ்ரர் தகநாயக்கா கண்டித்தார்.

மந்திரியின் விவசாயத் திட்டங்களில் ஒன்றாவது பயன் அளிக்கவில்லை என்று டக்ரர் A. P. சொயிசா கூறினார்.

தமது வேலை எல்லாருக்கும் தெரியுமாதலால் தாம் ஏதும் பதில் சொல்ல விரும்பவில்லையென்று மிஸ்ரர் செனனாயக்கா ஒரே வார்த்தையிற் கூறிவிட்டு இருந்தார். ஆர் குறை கூறியும் என்; விவசாயப்பகுதி மானியங்கள் நிறைவேறின.

## ஐக்கிய இயக்க எதிர்காலம்

### பாதுகாப்பேன் என்கிறார் செனனாயக்கா

ஒத்துழைப்பு இயக்கத்தின் எதிர்காலம் என்ன? என்று பிபிலைப் பிரதிநிதியான மிஸ்ரர் W. தகநாயக்கா அரசாங்கசபையிற் சென்ற வெள்ளிக்கிழமை விவசாய மந்திரியைக் கேட்டார். ஐக்கிய இயக்கம் அபிவிருத்தி யடையுமா? அதனை நன்னிலைப்படுத்துதற்கு அரசாங்கம் அதற்குப் போதிய பாதுகாப்புக்கள் அளிக்க வேண்டும் இப்போதே பல வர்த்தகர்கள் இந்த ஐக்கிய இயக்கத்தை நசுக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றனர், அவர்கள் தங்கள் பணத்தைச் செலவழித்து இந்த இயக்கத்தை அழிக்கப் பின்னிற்கமாட்டார். எனவே ஐக்கிய இயக்கம் இப்படிப்பட்ட சுயநலமிகளால் நசுக்கப்படமாட்டாது என்பதற்கான உத்தரவாதத்தை விவசாயமந்திரி அளிக்கவேண்டுமென மிஸ்ரர் தகநாயக்கா கேட்டார்.

மன்னார்ப் பிரதிநிதி ஸ்ரீ ஜே. தியாகராஜா ஒத்துழைப்பு இயக்கத்தை வளர்ப்பது அரசாங்கத்தின் கடமை என்றும் அரசியல் விஷயங்களிலும் ஒத்துழைப்பு முறைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

அரசியல் விஷயங்களைக் கூட்டுறவு முறையில்நடாத்துவது இச்சந்தர்ப்பத்தில் அவசியம் என்பதை மிஸ்ரர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா வற்புறுத்தி, "எங்கள் இலங்கையின் பிரதமமந்திரியாக வரவிருக்கும் மிஸ்ரர் செனனாயக்கா, இவ்விஷயத்தை அகத்திட் கொள்ளுவார் என நினைக்கிறேன். ஒரு சிலரின் நன்மைக்காக, ஒரு சிலராலேயே அரசாங்கப் பரிபாலனம் நடக்கின்றது என்ற அபவாதம் ஏற்படாத முறையில், நாம் கூட்டுறவு முறையில் அரசியலையும் நடத்துவோமாக" என்றார்.

இவற்றுக்குப் பதில் அளித்த மிஸ்ரர் செனனாயக்கா, "இந்த ஒத்துழைப்பு இயக்கம் என்னுடைய பரிபாலனத்திலேயே உள்ளது. அதனை நான் வளர்த்து, அதற்கும் பலம் கொடுப்பதே எனது உறுதி: சுயநலமிகளால் ஒத்துழைப்பு இயக்கம் பங்கப்படாதபடி நான் பாதுகாப்பேன்" என்றார்.

## இலக்கியம்

பண்டிதர் கா. பொ இரத்தினம் B. A. (Hons)

(முற்றொடர்)

ஆகவே, உரை வடிவத்திலேனும் பாட்டு வடிவத்திலேனும் இயற்றப் பெற்றனவாய், சிறந்த உடம்பும் உயிரும் – சொல்லும் பொருளும் - உள்ளனவாய், யாவர்க்கும் பயன்படத்தக்க உண்மை, அழகு, நன்மை என்னும் பண்புகள் நிறைந்தனவாய்ச் சிருட்டிக்கும் ஆற்றல் வாய்ந்த மெய்ப்புலவர்களால் 'என்றும் புலராது யாணர் நாட் செல்லுகினும் நின்றலர்ந்து இன்பத்தேன் பிலிற்றும் நீர்மையனவாகப் படைக்கப்பட்டனவே இலக்கியங்கள் எனக. இவை காப்பியங்களாக நாடகங்களாக தனிப் பாடல்களாக, கதைகளாக அன்றேல் விருந்துகளாக அமைந்து விளங்கலாம். ஆனால் பாட்டு உரை எனும் இரு வடிவங்களிலும், புலவனி உணர்ச்சியை உருப்படுத்துவதற்கு வாய்ப்பானது பாட்டேயாகும். அன்றியும் அது இசையுடன் கூடி விளங்குவதால் புலவனின் உணர்ச்சியின் உறைப்பைக் காட்டிப் படிப்பவர்களிடத்தும் அதனை யுண்டாக்குவதற்கு இசையுதவுகிறது. மேலும் உணர்ச்சிப் பெருக்குக்குக் குறையாதிருப்பதற்குச் சொற் சுருக்கமும் இன்றியமையாத தன்றோ! இதனாலேயே பாட்டில் எழுதப்பட்ட இலக்கியங்களையே விசேடமாக மக்கள் போற்றிப் படித்து இன்புறுகின்றனர்.

உலகத்திலே மிகச் சிறந்த இன்பம் இலக்கியத்தைச் சுவைத்தலால் உண்டாகும்என்பதைமாணிக்கவாசகசுவாமிகள் திருக்கோவைச்செய்யுள் ஒன்றிலேபுலப்படுத்துகிறார் சங்கஇலக்கியங்களுள் சிறந்த தொன்றாகிய கலித்தொகையைப் படித்து இன்புற்ற புலவர் ஒருவர் 'ஒருநூலும் வேண்டாம் கனிபார்வோம் பொங்குகலி யின்பம்' என்று பாடியிருக்கிறார். இலக்கியத்தைப் படிக்கப் படிக்க இன்பம் மேலும் மேலும் பெருகும் என்பதைத் திருவள்ளுவர் 'நவில் தொறும் நூனயம் போலும்' எனுந் தொடராற் புலப்படுத்தியுள்ளார்.

"பொன்னின் சோதி போதினின்
நாற்றம் பொலிவே போற்
தென்னுண் டேனிற் றீஞ்சுவை
செஞ் சொற் கவியின்பம்"

எனும் அடிகளிற் பாட்டு இன்பமயமானதென்பதைக் கம்பரே கூறுகிறார். இந்த இன்பத்தை அனுபவிப்பதே இலக்கியங் கற்பதன் நோக்கமாம். இந்த இன்பத்தைக் காண்பதாலும் அனுபவிப்பதாலும் அழகை அகத்திலும் புறத்திலும் காணும் ஆற்றலும், அழகின் என்றும் அழியா உண்மையி லீடுபடுதலும் நல்லனவற்றையே என்றும் நாடிச் செய்தலும் ஏற்படுகின்றன. இவற்றால், காடினல் நியூமன் எனும் அறிஞர் கூறுவதுபோல் உளம் பண்படுகிறது; அறிவு விரிகிறது.

சிறந்த இலக்கியங்களின் உயிர்நிலை கற்பனையே எனக. பாட்டென்பது கற்பனையின் புலப்பாடே. Poetry is the expression of imagination என்று ஷெல்லி எனும் ஆங்கிலப் புலவர் கூறியுள்ளார். கற்பனை எனும் சொல்லிற்குப் பலவிதமான கருத்துக்களிருப்பினும் தோற்றுவித்தல், பிறப்பித்தல் என்பதே ஈண்டுப் பொருத்தமானது, சாதாரணமாக நீர்வளம் மிக்க வயல்களிலே ஒரு அன்னக் குஞ்சு, அதன்தாய், தாமரை மலர், எருமை, தேரை முதலியவற்றைக்கண்டால் நம் மனத்திற்கு ஏற்படும் கற்பனை யாது? புலவர் பெருமானாகிய கம்பர் கற்பிக்கும் தொடர்பை - தீட்டிய சித்திரத்தை - அவர் செய்யுளிலேயே பாருங்கள்:

"சேலுண்ட ஒண்கணாரிற்
றிரிகின்ற செங்காலன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி
வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்றுமேதி
கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத்
தேரை தாலாட்டும் பண்ணை"

கற்பனையிலே பல்வகைப் படைப்புகள் உள. அதனை ஒரு பெரிய உலகமென்றே கூறவேண்டும். இக் கற்பனையுலகு எங்கள் வாழ்க்கையை ஒட்டியும் ஒட்டாதும் இருக்கின்றது. இந்தக் கற்பனையுலகைப் பொய்புலகாக, மயக்க உலகாக எண்ணிப் பிழைபடாமல் இதற்கும் எங்கள் உலகுக்குமுள்ள தொடர்பை மாணவர்கள் கண்டு இன்பமுறச்செய்யவேண்டியது ஆசிரியர் கடனாகும். 'உண்மையைச் சொல்வதுதான் கற்பனையின் கடன்" எனப் பேராசிரியர் மக்னில் டிக்சன் கூறுகிறார். கற்பனைக்கும் உலக வாழ்விற்குமுரிய தொடர்பை ஆசிரியர் நன்கு அறிந்தால்தான் இலக்கியம் வாழ்க்கையோடு சேர்ந்திருப்பதை மாணவர்க்குப் புலனாக்கலாம். இலக்கியத்தை விளங்குவதற்கும் கற்பனை வேண்டுமென உவோட்ஸ வோத் என்னும் புலவர் கூறியுள்ளார்.

'இலக்கியம் வாழ்க்கையின் விமர்சனமே' என்றும் 'வாழ்வை நடத்துவதற்கு அது வழி காட்டுகிறது' என்றும், மதியு ஆனல்ட் எனும் புலவர் கூறிய உண்மையை நாம் மறக்கலாகாது. சுருங்கக் கூறின் வாழ்வில் இன்பத்தைப் பெருக்க மாத்திரமன்றித் துன்பத்தை நீக்கவும் இலக்கியம் உதவிசெய்கிற தெனலாம். துன்பத்தினின்று நீங்கி எப்பொழுதும் இன்பமாக வாழ்தல்தான் அமர வாழ்வு அல்லது தெய்வ வாழ்வு எனப்படுவது. இந்த வாழ்வினை வாழ்வதற்கு இலக்கியம் யாவர்க்கும் இன்றியமையாதது. ஆகையினாலே இலக்கியத்திற்குப் பாடசாலைகளில் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். இலக்கியத்தின் இப்பெருஞ் சிறப்பை உணர்ந்தே டக்ரர் லீவிஸ் என்னும் பேறிஞர் தனது சொந்த இலக்கியத்தைப் படிக்காதவன் பிறவற்றை எவ்வளவு கஷ்டப்பட்டுக்கற்றாலும்படித்தவனாகி விடமுடியாது எனக் கூறியுள்ளார். இக்கூற்றை இக்காலத் தமிழ்மக்கள்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஷ
ஆவணிமீ உருஉ செவ்வாய்க்கிழமை

## படக்காட்சியிற் சில ஆபாசங்கள்

I

இக்காலத்திலே நவமாகக் கண்டு பிடிக்கப் பட்டவற்றுட் படக்காட்சி முறையு மொன்ருகும்; இப்படக் காட்சி முறையிலைலே உலகிலுள்ள கற்ருர்க்கும் மற்ருர்க்கும் பல வகையான போதனைகளையும் நன்மையையும் செய்யலாகுமென்பது அறிஞர் பலர் கொள்கை; நல்லமுறையில் உபயோகித்தால் நன்மையையும் தீய முறையில் உபயோகித்தால் தீமையையும் பயக்குஞ் சாதனங்களுட் படக்காட்சியும் ஒன்றெனலாம்; "பாம்புண்ட நீரெல்லாம் நஞ்சாம் பசுவுண்ட - தேம்படு தெண்ணீர் அமிர்தமாம்" என்ருங்கு, படக்காட்சியினுல் விளையும் தீமையும் நன்மையும் முறையே அவற்றைக் கையாளுவோருடைய இயல்பைப் பொறுத்தனவாகும்.

படக்காட்சிகள் இக்காலத்துப் பல நாடுகளிலே பல பாஷைகளில் நடத்தப்படலாயின; ஆனுல் எல்லாப் படங்களுள்ளும் தமிழ்ப் பாஷையில் நடத்தப்படும் படங்களே தகைமையிற் குறைந்தனவென்று படக்காட்சியில் அநுபவம் படைத்தவர்களும், படம் பார்க்கும் வேட்கை கொண்டவர்களும் பேசக் கேட்டுள்ளேம்.

தமிழ்மொழிப் படங்களுக்கு ஆதாரமாகவுள்ள நூல்களுஞ் சாதனங்களும் பலவெனலாம்; அரிச்சந்திர நாடகம் போன்ற பழைய தமிழ் நாடகங்கள், சந்திர காசன், சகுந்தலை, வில்கணீயம் போன்ற வடமொழி நாடகங்கள் கதைகள், புராண இதிகாசங்களிலுள்ள கதைகள், ஆங்கில நாடகங்களின் தமிழ் மொழி பெயர்ப்புக் கதைகள், அடியார் பெரியார் அற்புத வாழ்க்கையைக் கூறும்வரலாறுகள், யுத்த நிகழ்ச்சிகளைப் பற்றிய விபரங்கள், சனசமூக வாழ்க்கையைக் குறித்து இக்காலத்தில் இயற்றப் படும்கதைகள் முதலியன தமிழ்ப் பேசும் படங்களிற் பெரிதும் காட்டப்படலாயின.

நாடகக் கதைகள் சம்பந்தமாகப் பெரும்பான்மையும் காட்டப் படுகின்றனவாகிய படக்காட்சிகளில் நல்ல தமிழும், சிறந்த் சங்கீதமும், இயன்றவரையில் நவரசமும் அமைந்திருக்க வேண்டுமென்பதும், எந்த ரசமும் அளவுக்கு மேற்பட வொண்ணுதென்பதுமே பழைய கொள்கையாகும்; ஆனுல் இக்காலத்திற் படம் பார்க்கச் செல்வோருட் பெரும்பாலார் பத்திரசத்தையும் பழைய ஒழுக்க வழக்கங்களையும் உபேட்சித்து, காம சிருங்கார வர்ணனைகளோடுகூடிய பாட்டுக்களையும், அப்படியான காட்சிகளையும், வேடிக்கைக்கான ஹாசிய ரச நடிப்புக்களையும் கேட்டும் பார்த்தும் போது போக்கத் தலைப்பட்டுக் கொண்டமையினுற் போலும், மேலே சொல்லப்பட்ட இயல்போடுகூடிய கதைகளைக் கொண்ட காட்சிகளையே படக் காட்சித் தொழிலாளிகள் அதிகமாகத் திட்டஞ் செய்து வெளியிடுகின்ருர்கள்; அப்படியான படங்களை இங்குள்ள மக்கள், அவர்களுள்ளும் யௌவனத்தோடு கூடிய ஆடவர் மகளிர்கள், பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியர் இச்சையோடு போய்ப் போய்ப் பார்த்து வருகிருர்கள்; இவ்வாருன ஆபாசங்களோடு கூடிய படங்கள் மேலே எடுத்துக் காட்டப்பட்ட மக்களுக்குச் செய்யும் அநர்த்தம் அற்பமென்றெண்ணுதல் புத்தியீனமாகும்; இவற்ருல் நேருங் கேடுகளெனிலோ மிகப்பலவெனலாம். அவற்றை இங்கே விரிப்பிற் பெருகும். இங்ஙனங் கூறுவதனுல், தமிழ்ப் படங்களுள் நன்மை பயக்கும் படங்களில்லையென நாம் சொல்ல வந்தோமென விபரீதமாக எண்ணிக் கொள்ள வொண்ணுது; பக்தகுசேலர், பக்தகௌரி பட்டினத்தார், மாணிக்கவாசகர், தாயுமானவர், கந்தலீலை, பக்த நந்தனுர், முதலிய படங்கள் பார்ப்போர்க்குப் பத்தியையும் ஒழுக்கத்தையும்தெருட்டுவனவெனலாம்; சிவகவி, அம்பிகாபதி முதலிய புலவர் சரித்திரப் படங்கள் சிலவும் இதோபதேசஞ் செய்வன; பிருதுவி ராஜன், மாதுருபூமி முதலிய வீரச் செயல்கள் சுவாதீனம் பெறுதற்காகிய முயற்சிகளோடு கூடிய படங்கள் இடையிடையே யுள்ளன. இப் படங்களிலும் இடையிடையே ஆபாசமான காட்சிகள் நிகழ்கின்றனவெனினும், அவற்ருற்பெறப்படும் நன்மையானதுதீமையைக்காட்டிலும் அதிகமென்றகாரணம்பற்றி ஒருவாறு ஏற்றுக்கொள்ளலாகும்.

பக்தி ரசத்தோடு கூடிய படங்களுள் ஹாசிய ரசத்தை அதிகம் புகுத்தினுற் சாமானிய சனங்கட்குக் களிப்புண்டாகும்; அவர்கள் படக்காட்சிக்கு வர விரும்புவார்களென்ற நோக்கம் பற்றிப் போலும், படம் ஆயத்தஞ் செய்வோர் அசங்கதமான ஹாசியக் காட்சிகளைச் சிறந்த படங்களுட் புகுத்திவிடுகின்ருர்கள்; புராணத்தை யாதாரமாகக் கொண்ட கதைகளைப் படத்திற் காட்டும்போது, சரித்திரத்தின் பிரதான பாகங்களைத் தானும் மேற்படிபுராணங்களோடு முரண்பட மாற்றிப் பெருங் கெடுதியை விளைக்கின்ருர்கள்; திருவிளையாடற் புராணத்திற் சொல்லப்பட்ட வன்னியுங் கிணறும் இலிங்கமும் வருவித்ததாகிய கதையை முழுவதும் விபரீதப்படுத்திப் படமாகக் காட்டுகின்ருர்கள். படம் பார்த்தவர்கள் புராணத்திற்சொல்லப்பட்ட கதை வேறு இது வேறென்று சந்தேகப்பட்டு, விஷயமறிந்தவரை வினவுகின்ருர்கள்; இனி, பெரிய புராணத்திலுள்ளதாகிய திருநீலகண்ட நாயனுர் சரித்திரத்தைப் படமாகக்காட்டும்போது, பரமசிவன் திருநீலகண்டரை உதைத்தலாகிய செயலும் நேருகின்றது; இக்காட்சி சைவமக்களனைவரையுந் திடுக்கிடச் செய்வதாகும்.

# ○○○ குறிப்புக்கள் ○○○

### இவை மெய்தானு?

அரசாங்க உத்தியோகத்தரை உயர்பதவிக்கு நியமிக்கும் விஷயத்தில் இலங்கையரசாங்கத்தை நடத்தும் செனனுயக்காக்கோஷ்டி அநுஷ்டிக்கும் முறைகளைக் கண்டித்துத் தம் அனுபவ வாயிலாக ஸ்ரீமான் கனகரத்தினம் அவர்கள் விளக்கும் அறிக்கையின் சாரம் இற்றைப் பிரசுரத்தின் பிறிதோர் இடத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றது ஸ்ரீமான். கனகரத்தினம் ஓர் பொறுப்பு வாய்ந்த தக்க மனுஷன்; மகத்தான பதவிகளைத் திறமையுடன் ஆற்றி, அதிகாரிகள் ஊரவர் என்னும் இருசாராருடைய மதிப்பையும் அபிமானத்தையும் பெற்றவர், அப்படிப்பட்ட அவர் இவ் விஷயமாக மிகைபடக் கூறுகின்ருர் என்ருே, அல்லது திரித்துக் கூறுகின்ருர் என்ருே நம்புவதற்கு நாம் தயாராக இல்லை ஸ்ரீமான், கனகரத்தினம் "ஓடிற்றர் ஜெனரல்" உத்தியோகத்துக்கு மிகவும் தகுதிவாய்ந்தவர் என்பதை சேர் ஒலிவர் குணத்திலகாவும், தேசாதிபதியும் ஒத்துக்கொண்ட போதிலும், "நேர்ந்துள்ள நிலைமையில்" அவரை அப்பதவியில் வைக்க முடியாது என்று ஆதே தேசாதிபதி கூறியதன் கருத்து என்ன? அப்படி நேர்ந்துள்ள நிலைமைதான் என்ன? என்பதைப் பொதுஜனங்கள் அறிய ஆவலாயிருக்கிருர்கள் என்பதைச் செனனுயக்காக் கோஷ்டிக்குச் சமர்ப்பிக்க விரும்புகிருேம். இந்நாடு தங்களுக்குத்தான் சொந்தமென்றும், தமிழ் மக்களுக்கு இந்நாட்டுப் பரிபாலனத்திற் பங்கு கிடைக்காது என்றும் செனநாயக்காக்கோஷ்டி மனப்பால் குடிக்கிறதா என்று கேட்கிருேம்; செனனுயக்கா குணத்திலகாக் கோஷ்டியினர் செய்யும் ஊதாரித்தனத்தை அம்பலப்படுத்துவது அரசாங்க உத்தியோகத்தரின் கடமையில்லையா? அவர்களும் அவர்கள் போன்ற தான்ருேன்றிகளும ஆற்றும் கிருத்திரமங்களைப் பகிரங்கப்படுத்துபவர், ஓர் தமிழ் மகனுயிருந்தால் அவருடைய எதிர்கால வாழ்வை, அவர்களுடைய சுயநலம் என்னும் பலிபீடத்தில் பலியிடவேண்டுமென்பதும் செனனுயகாக் கோஷ்டியின் அரசியல் ஞானமா? அரசாங்க உத்தியோக வர்க்கம், அரசியல்வாதிகளின் ஆணைக்குட்பட்டு இனியும் இருக்குமேயானுல் இலங்கையின் எதிர்கால சுபீட்சத்துக்கு வழியில்லை என்பதே எமது அபிப்பிராயம்.

●

### அரசாங்கப் பொறுப்பில் அன்னதானமா?

இலங்கைக்குப் பௌத்தமதம்வந்த 2490ம் ஆண்டு வைபவம் இன்று அநுராதபுரியிற் கொண்டாடப்படுகின்றது. இதற்கெனப் பெருந் திரளான பௌத்த மதத்தினர் இலங்கையின் நாநா பக்கங்களிலுமிருந்து கூடியுள்ளனர். இந்தக் கொண்டாட்டத்தின் போது, விவசாயப் பகுதியின் பிரசாரப் பகுதியார்பலாக்காய், ஈரப்பலாக்காய், பயறு மா முதலியவற்றில்இருந்து ஆக்கப்பட்ட தின்பண்டங்களை இன்றும் நாளையும் அங்கு கூடியுள்ள யாத்திரீகர்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர் என்று ஓர் செய்தி கூறுகிறது. இப்படித் தின்பண்டங்கள் ஆக்குதற்கான செலவு மிஸ்ரர் செனநாயக்காவின் சொந்தப் பணத்திலிருந்து செய்யப்போவதில்லை. இலங்கையிலுள்ள பௌத்தர், ஹிந்துக்கள், கிறிஸ்தவர், இஸ்லாமியர் எனப்படும் பல திறப்பட்ட சமயிகள் வரிப்பணமாகக்கொடுக்கும் அரசிறையிலிருந்தே செலவழிக்கப்படப்போகின்றது என்பதை இன்று அதிகாரம் வகித்திருக்கும் சிங்கள மந்திரிகளுக்கு ஞாபகமூட்ட விரும்புகின்ருேம். ஒரு சமயத்து யாத்திரீகர்களின் நன்மைக்காகப் பொதுப் பணத்தைச் செலவழித்தல் நீதியின்பால், ஜனநாயக ஆட்சியின் பாற்பட்டதாகாது என்பதை மிஸ்ரர் செனனுயக்காவும் அவருடைய சகாக்களும் அறியமாட்டார்களா? கதிர்காமம் நல்லூர், மருதமடு, வேர்விளை முதலாம் இடங்களில் நடக்கும் பலதிறப்பட்ட மதஸ்தர்களின் உற்சவ காலங்களில் அரசாங்கம் இப்படியான ஔதாரிய செயல்களை இதுவரை செய்யாது, பௌத்தர்களின் நன்மைக்காக மட்டும் இத்தகைய தானம் செய்யப் புறப்பட்டது இந்த இலங்கையின் எதிர்கால சுபீட்சத்துக்கு நல்ல உற்பாதமல்ல என்பதை நாம் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

### நாளை பாரதிதனம்

தமிழ்மக்களைத் தட்டிஎழுப்பி அவர்களுக்கு வீரசுதந்திரப் பாதையைக் காட்டி அவர்களை வீர புருஷராக்கிய எங்கள் தமிழ்நாட்டு வரகவி சுப்பிரமணியபாரதியார் தினம் நாளை நிகழுகின்றது பாரதநாடும் அதன் மூலமாகத் தமிழ்நாடும் சுதந்திர மாளிகையை அடையப் இருக்கும் இந்தக் காலத்திலே, பாரதியை நினைத்து "ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று" அகமகிழ்ந்து இத்தினத்தைத் தமிழ் மக்கள் எல்லாரும் கொண்டாடுவோமாக

### ரிஷிகேசம் ஸ்ரீ சுவாமி சிவானந்தசரஸ்வதி அவர்களின் 60-வது பிறந்தநாள் விழா

மேற்படி விழா வியவருஷம் ஆவணி மாசம் 23ந் திகதி (8.9.46) ஞாயிற்றுக் கிழமை திருகோணமலை, க்ஷேத்திரத்தில் அமைந்துள்ள 'சிவானந்த சாதன நிலயத்தின்' சார்பாக இலங்கையிலும் யாழ்ப்பாணத்துக் கோண்டாவில் "தமிழ் வேத பாராயண சபையின்" சார்பில் உயர்திரு அம்பலவாண சுவாமிகளின் தலைமையிற் கொண்டாடப்பட்டது அன்று தெய்வநெறிக் கழகத்தின் இலக்ஷியத்தையும் சுவாமிகள் பெருமையையும் பற்றி ஆசிரியர் பண்டித இ. திருநாவுக்கரசு அவர்களாலும் சுவாமி க வடிவேற்பிள்ளை அவர்களாலும் சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன.

கடித.

### அரிசி யில்லை!

#### லண்டன் மந்திரிக்கு அவசர தந்தி

இப்போது கையிருப்பி லுள்ள அரிசி நாளை (11-ந் திகதி) வரைக்கும் தான் போதுமாம். எனவே காலத்துக்குக் கப்பல்கள் வராவிட்டால் இலங்கையிலே உணவு நிலைமை மோசமாகிவிடும் என்று மிஸ்ரர் செனனுயக்கா சென்ற வெள்ளிக்கிழமை கூறினுர்.

மாவின் நிலைமையும் மிகவும் மோசமான நிலைமையில்தான் இருக்கிறதாம். இப்போதுள்ள மா 17-ந்திகதி வரைக்குந்தான் போதுமாம்.

இந்த மோசமான நிலைமையை விளக்கிக் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு ஓர் அவசர தந்தி அனுப்பப்பட்டிருக்கிறது. வேறு நாடுகளுக்குப் போகும் உணவுக் கப்பல்களை, இந்த ஆபத்தை நீக்குதற்காக இலங்கைக்குத் திருப்பி விடவேண்டுமென்பதே அத்தந்திச் செய்தியின் சாரமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் என்பது யாருக்கு?

## பதினைந்து ஆண்டுகள் பட்டதுபோதும்

**ஜனங்களால் ஜனங்களுக்கான ஆட்சி — அதனைத்தான் இனி நிறுவவேண்டும்**

### மூட்டுப்பூச்சிகள் கும்மாளம் ஒழிக

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

**லட்சிய ஒற்றுமை**

பாராளுமன்றத்துத்தேர்தற்காலம் சமீபிக்கின்றது. புதிய பாராளுமன்றத்தில் தம் செல்வாக்கை, தம் அதிகாரத்தை நிலைநாட்ட பல கட்சிகள் தோன்றியிருக்கின்றன. இவற்றுட் சில அரசியற்கொள்கைகளையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. சில அரசியற் கொள்கையுடன் வகுப்புப்பிரச்னையை விசேஷ ஆதாரமாகக்கொண்டுள்ளன. இந்தக்கட்சிகள் யாவை என்பதைக் காலத்துக்குக் காலம் இப்பத்திரிகை மூலம் ஓரளவுக்கு விளக்கி வந்திருக்கிறேன். இந்தக் கட்சிகள் எவற்றிலும் சேராது தனிப்பட்ட முறையில் பாராளுமன்றத் தேர்தலுக்கு மூற்படவும், பலர் முன்வந்திருக்கிறார்கள். இந்தக் கட்சிகள், தனிப்பட்ட மனிதர்கள், கொண்டிருக்கும் கொள்கைகள் எல்லாம் பலதிறத்தனவாகவிருப்பினும், ஒரு விஷயத்தில் ஒற்றுமைப் பாடுடையனவாக இருக்கின்றதை நாம் அவதானிக்கமுடியும். எங்கள் நாடு இலங்கை; அது எல்லார்க்கும் பொதுவானது; அப்படியான எங்கள் தாய்நாடு சகலவிஷயங்களிலும் முன்னேறவேண்டும்: இப்போது அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இன்னும் ஒருபடி ஏறப் பூரண சுயராச்சியம் அடையலாம். அதன் மூலமாக இந்நாட்டு மக்களுக்குத் தொண்டுபுரியலாம். தொண்டு புரிய வேண்டும் என்னும் ஒரு விஷயத்தில் இந்த இலங்கையில் உள்ள சகலரும் ஒற்றுமையுடையவர்களாகவே இருக்கிறார்கள்.

●

**லட்சிய மார்க்கம்**

இந்த மேலான லட்சியத்தை நாம் அடைவது எப்படி? இந்த ஒரு விஷயத்தில்தான் அபிப்பிராயவேற்றுமைகள் எழுந்து பரஸ்பரம் பிணக்கும், மனக் குரோதமும் ஏற்பட்டுவருகின்றன. இந்த வேற்றுமைகள் கேவலம் அரசியல் விஷயத்துடன் மாத்திரம் நிற்குமானால், நாம் அவற்றை வரவேற்கவேண்டும். அப்படியான வேற்றுமைகள், ஜனநாயகத்துக்கான நல்ல அறிகுறிகள். ஆனால் இந்த வேற்றுமைகள், கேவலம் சுயநலம், பதவி வேட்டை, பட்ட மோகம் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டே எழுந்து, அவற்றைப் பூர்த்திசெய்யக் கிளம்பும் அரசியல் வாதிகள் தத்தம் பேச்சுக்களாலும், எழுத்துக்களாலும் இன்னும் பலவித பிரசாரங்களாலும் பாமர ஜனங்களைப் பம்பரம்போல ஆட்டி, அவர்கள் மனத்தைக் குழப்பி, அவர்களை அங்கும் இங்கும் ஆட்டிவைத்து அலைக்கின்றார்கள். பாமர ஜனங்களெனிமேலா நிலைமையை நிஷ்பாதகமாக அவதானித்து, இருபக்க நியாயங்களையும் கேட்டு ஓர் தக்கமுடிவுக்குவர அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறதில்லை. நயவார்த்தை, வெருட்டு பணம், பதவி எல்லாம் வாக்காளராயுள்ள பொதுஜனங்களுக்கு மாறி மாறிக் கொடுக்கப்படுகின்றன. இவற்றால் அவர்கள் அரசியல் விஷயமாகத் தம் மனச்சாட்சிப்படி ஒருதீர்மானத்தைப் புரியமுடிகிறதில்லை.

●

**எங்கள் நிலைமை என்ன?**

இன்று இந்த இலங்கையில் வதியும் மக்களுடைய நிலைமையென்ன? டொனமூர்த் திட்டத்தால் இந்த இலங்கை மூக்காற் பங்கு சுயராச்சியம் அடைந்துவிட்டதாக பலர் கூறினர். இந்த மூக்காற்பங்கு சுயராச்சியத்தை நாம் அடைந்தும், சென்ற 15 ஆண்டுகளாக நாம் எந்தவிதத்திலாவது முன்னேறியிருக்கின்றோமா? நான் இங்கே "நாம்" என்று கருதுவது தமிழ்மக்களை மாத்திரமல்ல, இந்த இலங்கையைத் தாயகமாகக் கொண்ட சிங்களர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர், வேடர் என்னும் பல சாதியாரையுமே ஈண்டுக் குறிப்பிடுகிறேன். நாம் எந்தவிதத்தில் முன்னேறியிருக்கின்றோம்? மூக்காற்பங்கு சுயராச்சியத்தை நாம் அடைந்ததன் கைமேற் பலன், அரை நிர்வாணத்துடன், கஞ்சிவரதப்பா என்றால் எங்கே வரதப்பா என்று அங்கலாய்த்து ஏங்கும்நிலைமைக்கு வந்ததுதான். இன்று இந்த இலங்கை மக்களில் 100-க்கு 99 விகிதமானோர் உண்ண உணவின்றிக் கங்காள உருவினராய்விட்டனர். மானத்தைக் காக்க ஒருமுழத் துண்டுக்கு மார்க்கமில்லை. மூக்காற் பங்கு சுயராச்சியத்தை நிர்வகித்து இந்தப் பதினைந்து ஆண்டுகளாக ஆற்றிவரும் புண்ணியவான்களின் கிருபையினால் நாம் இந்த நிலைமைக்கு வந்துவிட்டோம்.

●

**இந்த நிலைமைக்குக் காரணம் என்ன?**

தன்னுடைய பிரஜைகளின் மானத்தைக் காக்க வகை தெரியாத ஓர் அரசாங்கம், தன் மக்களின் பசிப்பிணியைப் போக்க மார்க்கந் தெரியாத ஓர் அரசாங்கம், தனது லட்சக்கணக்கான மக்களை நடைப்பிணங்களாக்கி அவர்களை என்புந்தோலுமாக்கிய ஓர் அரசாங்கம், ஓர்சீர்திருந்திய நாட்டில் ஒரு கணமேனும் நிலைத்திருக்கமுடியாது. அந்த அரசாங்கத்தில் அதிகாரம் படைத்திருந்தவர்கள் தேசத் துரோகிகளாகக் கருதப்பட்டு, அவர்களுக்குப் பொதுஜனங்களால் தக்கதண்டனை விதிக்கப்படும். ஆனால் இந்தப் பாவம் செய்த இலங்கையில் இந்த மகானுபவர்கள் இன்னும் அட்டைபோல ஒட்டிக்கொண்டுதானிருக்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

---

# ருஷியா நீங்கி விடுமா?

## சர்வதேச ஸ்தாபனத்தின் எதிர்காலம்

ருஷியா ஐக்கிய தேச ஸ்தாபனத்தை விட்டு நீங்கித் தன் எண்ணப்படி இனிக் கருமம் ஆற்றுமா? அதற்கான உற்பாதங்கள் தோன்றுகின்றன என்று லண்டன் டெயிலி மெயில் பத்திரிகை கூறுகிறது அப்படி ருஷியா நீங்குமானால் அது அப்போதுள்ள நிலைமையில் நன்மையேயொழிய தீமை அளிக்கமாட்டாது, என இப்பத்திரிகை கூறுகிறது.

உலக சமாதானம் ஆக்கப் புறப்பட்ட நாலு வல்லரசுகளுக்கிடையே ஒருபோதும் இதுவரை சமாதானம் ஏற்பட்டதில்லை சமாதானக் கூட்டங்கள் குழப்பங்கள் இல்லாமல் நடைபெறுவதில்லை.

ருஷியா சர்வதேச ஸ்தாபனத்தை விட்டு நீங்குமானால் இங்கிலாந்தும் அமெரிக்காவும் ருஷியர் தலையீடில்லாமல் இஷ்டப்படி கருமங்களைச் சாதிக்க முடியும். ஐரோப்பாவில் உள்ள குழப்படங்களும் நீங்கிச் சிறிது சுபீட்சமும் நிலவலாம்.

இப்படியான நிலைமை ஏற்படும் காலத்திலே கிழக்கு நாடுகளுக்கும், மேற்கு நாடுகளுக்கும் இடையே அதிகாரத்துக்கான போராட்டங்கள் நிகழவும் கூடும், என்று டெயிலிமெயில் கூறுகிறது.

---

## கம்பர் விழா

இவ்விழா கொழும்புத்தமிழ்க்கழக ஆதரவில் இம்மாதம் 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை (22-9-46) காலை 6 மணி தொடக்கம் வெள்ளவத்தைச் சைவமங்கையர் சமூக மண்டபத்தில் நடைபெறும். சென்னைப் பல்கலைக் கழகப் பிரதம தமிழ் விரிவுரையாளராகிய திரு. R. B. சேதுப்பிள்ளை B A, B L., அவர்களும், திருநெல்வேலிப் பேராசிரியராகிய திரு அ. சிநிவாசகராகவன் M. A. அவர்களும் வேறு அறிஞரும் விரிவுரைகள் நிகழ்த்துவார்கள் என அறியலானோம்.

---

## கொழும்பில் சைவப் பிரசங்கம்

திருவாளர் K. V. S. சுந்தரம் பிள்ளை அவர்கள் போன்ற சில இந்திய மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி கொழும்பில் வேல் திருவிழா தொடக்கம் இதுகாறும் பல சைவப் பிரசங்கங்கள் இயற்றிய நாகர் கோவில் திரு. கெ. ஆறுமுகநாவலர் அவர்கள் சென்ற புதன்கிழமை (4-9-46) இரவு உற்சவத்தின்போது நூகெகொடை "சிவபுரி" என்னும் பிள்ளையார் கோவிலில் "சைவசமயமும் ஆலய வழிபாடும்" என்னும் பொருள்பற்றி ஒரு சிறந்த பிரசங்கஞ் செய்தார். பிரசங்கத்தின் பின் மேளக்கச்சேரியுடன் விநாயகரை நறுமலர்களால் அலங்கரித்து எழுந்தருளச்செய்து வீதிவலங் கொண்டு வரப்பட்டது.

— கடித

---

## நாம் சுதந்திர வீரர்.

நாம் ஆர்க்கும் குடிஅல்லோம்; நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை யில்லோம்;
ஏமாப்போம்; பிணி அறியோம்; பணிவோம் அல்லோம்;
இன்பமே எந்நாளும்; துன்பம் இல்லை:
தாம் ஆர்க்கும் குடிஅல்லாத் தன்மையான
சங்கரனை சங்கவெண் குழை ஓர்காதில்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்
கொய்ம்மலர்ச் சேவடி இணையிணையே குறுகினோமே.

— அப்பர்.

---

# தமிழரின் ஒத்துழைப்பு வேண்டுமாம்

## ஆனால் தமிழ்க்காங்கிரஸ் உதவி வேண்டேன் என்கிறார் சேனநாயக்கா

### தமிழ்க் காங்கிரஸ் வகுப்புவாத ஸ்தாபனமாம்

அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் தான் தலைவராகவுள்ள ஐக்கிய தேசீயக் கட்சிக்கே அதிகாரம் வரும் எனத் தாம் நம்புவதாகவும், அப்படி அதிகாரத்துக்கு வரும் காலத்தில் ஓர் வகுப்புவாதக் கட்சியான தமிழர் காங்கிரசின் ஒத்துழைப்பைத் தான் ஒருபோதும் நாடமாட்டார் என்றும் ஐக்கிய தேசீயக்கட்சியில் உள்ளவர்களைக்கொண்டே மந்திர சபையை அமைத்துத் தேச பரிபாலனத்தைச் செய்வது என்றும் ஐக்கிய தேசீயக் கட்சியின் தலைவராகிய மிஸ்டர் டி எஸ் சேனநாயக்கா சென்ற வெள்ளிக்கிழமை கொழும்பில் நிகழ்ந்த மேற்படி கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்திற் கூறினார்

இந்த இலங்கையின் அரசியல் முன்னேற்றத்துக்குத் தமிழ் மக்கள் ஆற்றிய தொண்டினை எவரும் மறுக்க முடியாது. எனவே, இந்த நாட்டின் பரிபாலன விஷயத்தில், தமிழ் மக்களது ஒத்துழைப்பையும் உதவியையும் நான் நாடுகிறேன் என்று மிஸ்டர் சேனநாயக்கா குறிப்பிட்டு மேலும் பின்வருமாறு கூறினார்:

"இந்த இலங்கையின் முன்னேற்றத்துக்காக உழைத்த சேர் பொன். இராமநாதன், ஸி. வ. லோரன்ஸ் முதலிய பெரியாரது முயற்சியால் நாம் இப்போது வெகுவாக முன்னேறியிருக்கிறோம். நாங்கள் எங்கள் சகல முயற்சிகளிலும் யாழ்ப்பாணத் தமிழ்ப் பெருமக்களது ஒத்துழைப்பை நாடுகிறோம். அவர்கள் முன்னர் எவ்வாறு இந்நாட்டின் முன்னேற்ற விஷயமாக உழைத்தார்களோ அவ்வாறே இனியும் உழைக்க அவர்களை வேண்டிக்கொள்ளுகிறேன். தமிழ்மக்கள தங்கள் சமயத்தை, கலாசாரத்தை நாகரிகத்தைப் பாதுகாக்கவும், தாங்கள் ஓர் சமூகமாக அவாப்படுகின்றனர் என்பதை யான் அறிவேன். அந்த விஷயத்தில் நாங்கள் எல்லோரும் ஒரு மனத்தினராய் அவர்களுக்கு எம்மாலான சகல உதவிகளையும் செய்வோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ் மக்கள் தேசாபிமானிகள், முயற்சியுடையார்; அவர்களுடைய ஒத்துழைப்பை நான் விளைகின்றேன.

"ஆனால் இந்த யாழ்ப்பாணத்தில் ஓர் வகுப்புவாதக்கட்சியும்இப்போது தோன்றியிருக்கிறது. இந்தக் கட்சிதான் தமிழர் காங்கிரஸ்: இந்தக் காங்கிரசின் பெயரால் ஒருசிலர் புதிய பாராளுமன்றத்துக்குள் நுழைந்தால், அவர்கள் ஒன்று சேர்ந்து, யார் அதிகம் விலை பேசுகிறார்களோ, அவர்களுடன் சேர்ந்து உழைக்கப் போகிறார்களாம். இந்த இலங்கையில் இனி வகுப்புவாதத்துக்கு இடமேயில்லை. எனவே தமிழ்க் காங்கிரஸ் இப்படியான விஷயத்தில் எதிரிடை கட்டி நிற்றல் மிகப் பிழை: இந்தக் காங்கிரஸ் பெயரால் பாராளுமன்றத்துக்கு யாரேனும் வந்து, எம்முடன் ஒத்துழைப்பதாகக் கூறினால், அதனை நான் ஒருபோதும் ஏற்கமாட்டேன் என்பதையும், நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடையாகவுள்ளவர்களின் ஒத்துழைப்பு எனக்குத் தேவையில்லை என்பதனையும் இப்போது பட்டவர்த்தனமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழனகப் பிறந்தது குற்றமா?

## செனநாயக்கா ஆட்சியில் நீதியில்லையா

### இல்லை என்கிறார் ஸ்ரீ கனகரத்தினம் அதற்குரிய காரணங்கள் என்ன?

### பரிபாலனத்தில் வகுப்புத் துவேஷத் தாண்டவம்

தமிழனகப் பிறந்தது ஓர் குற்றமா? அது இந்த இலங்கையில் — செனநாயக்காக் கோஷ்டியினர் அதிகாரம் செலுத்தும் ஸ்ரீலங்காவில்—குற்றம் தான். அந்தக் குற்றத்துக்காகவே தனக்கு உரித்தாகவேண்டிய பதவியை மாட்சிமை தங்கிய எங்கள் இலங்கையரசாங்கம் தனக்குக் கொடுக்கவில்லையென்று, இதுகாறும் இலங்கைக் கணக்குப் பரிசோதனை அதிகாரியாகவிருந்து, சென்ற 5-ம் திகதி இளைப்பாறியுள்ள ஸ்ரீ க. கனகரத்தினம் அவர்கள் ஓர் அறிக்கை விட்டிருக்கிறார்.

ஸ்ரீமான் கனகரத்தினம் 35 ஆண்டுகளுக்குமுன் அரசாங்க சேவையிற் சேர்ந்தார். அவர் தம் திறமையினலும், ஊக்கத்தாலும், தளரா முயற்சியாலும் படிப்படியாக முன்னுக்கு வந்தவர். ஈற்றில் கணக்குப் பரிசோதனைப்பகுதியில் பிரதி அதிகாரியானர். பிரதியதிகாரியாக இரண்டு ஆண்டுவரை அவர் கடமையாற்றியபோதிலும், அவரை அந்தப் பதவிக்கு நிரந்தரமாக நியமிக்க அரசாங்கத்துக்கு மனம் வரவில்லை. இதற்குக் காரணம் என்ன?

இதனை விளக்கி ஸ்ரீமான் கனகரத்தினம் பின் வருமாறு கூறுகிறார்:—

"1945-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5-ம் திகதி வரவுசெலவுத் திட்டம் சம்பந்தமான விவாதம் அரசாங்கசபையில் நிகழ்ந்தபோது, நிதிக் காரியதரிசியான சேர் ஒலிவர் குணத்திலகா, "கிளறிக்கல் உத்தியோகத்தரில் மிகத் திறமை படைத்தவராயிருந்தபடியினல், ஸ்ரீ கனகரத்தினத்தை நானே தெரிந்தெடுத்து, அவரிலும் பார்க்க சேவையிற் கூடிய 200 உத்தியோகத்தர்க்கு மேலாக அவரை உயர் பதவியில் விடுத்தேன். இன்று அந்த ஸ்ரீ கனகரத்தினம் கணக்குப் பரிசோதனை அதிகாரியாக நியமிக்கப்படுதற்குரிய சகல தராதரங்களும் பொருந்தியவராயிருக்கிறார்" எனச் சிலாகித்துக் கூறினர்.

"இப்படியெல்லாம் என்னைப்பற்றி சேர் ஒலிவர் குணத்திலகா வானளாவப் புகழ்ந்தார். ஆனல் பின் நிகழ்ந்ததென்ன? இப்படிக் கூறியதற்கு மாருக் கருமங்கள் ஆற்றப்பட்டன. அந்தப் பதவியை நிரப்புதற்கு, ஓர் அந்நியர் இறக்குமதி செய்யப்பட்டார். இப்படி அந்நியரை இறக்குமதிசெய்யத் தீர்மானித்ததுதான் நியாயத்தின் பாற்பட்டதா?

"இலங்கையில் உள்ள உயர் பதவிகளுக்கு இயலுமானவரை இலங்கையரையே நாம் நியமிக்கவேண்டும் என்று 1937-ம் ஆண்டிலே இலங்கை மந்திரசபையினர் ஓர் கொள்கையை வகுத்தனர். அப்படி வகுக்கப்பட்ட கொள்கைக்கு விரோதமாக, அதே மந்திரிகள் இந்த உத்தியோகத்துக்கு ஓர் அந்நியரை இறக்குமதி செய்யத் தீர்மானித்தனர்.

"நான் இவ்விஷயமாகத் தேசாதிபதியிடம்சென்று முறைப்பட்டேன். என் முறையீட்டைத் தேசாதிபதி கருணையுடன் கேட்டார். 'நீர்தான் இந்த உத்தியோகத்துக்கு மிகவும் தகுதியாக இப்போது இலங்கையில் இருப்பவர். ஆனல் இந்தச் சந்தர்ப்பத்தில் புற தேசத்திலிருந்து ஓர் அந்நியரை இந்த உத்தியோகத்துக்குக் கொண்டுவருவது ஆவசியகமாய் விட்டது' என்று மேன்மை தங்கிய தேசாதிபதி கையை விரித்தார். நான் அவ்வளவில் நின்றுவிடவில்லை. மீண்டும் எனது நியாயத்தைத் தேசாதிபதிக்கு எடுத்துரைத்து வாதாடினேன். புதிய அரசியற் றிட்டத்தின் படிக்கும், கணக்குப் பரிசோதனை அதிகாரியாயுள்ளவர் முன்போன்ற வேலைகளைத்தான் செய்வார். சில்விஷயங்களில் மாற்றம் இருந்தாலும், அம் மாற்றத்துக்கான திட்பநுட்பங்களை நான் சில காலத்துக்குள்ளேயே கற்றுக்கொள்ள முடியும். வேண்டுமானல், இங்கிலாந்திலேயுள்ள முறையைப் பழகவும் நான் தயார். நான் இங்கிலாந்துக்குப் போய் அங்குள்ள நுட்ப முறைகளை மிகச்சொற்பகாலத்திற் பயின்றுகொள்ளமுடியும் என்று தேசாதிபதிக்கு எடுத்துரைத்தேன. அதற்கு அவர் செவி சாய்க்கவில்லை சரி இதுதான்போகட்டும். அரசாங்க சேவையில் உள்ளவர்களின் அந்தஸ்தையும் கௌரவத்தையும் காப்பாற்றுதற்காகவேனும். என்னை "ஒடிற்றர் ஜெனரல் பதவியில்" ஒரு ஆண்டு காலத்துக்காவது வைத்திருங்கள அதன்பின் நான் இளைப்பாறுகிறேன் என்று வேண்டினேன் எனது நியாயங்கள், கூற்றுக்கள், வேண்டுகோள்கள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்கநாதமாயின.

"என்னை நிரந்தரபதவியில் வைக்க முடியாது என்று கடைசியாக எனக்கு அறிவிக்கப்பட்டது. அப்படியானல் இவ்விஷயத்தை அரசாங்கசபையில் விவாதத்துக்கு விடுங்கள் என்று கேட்டேன். அதற்கு இணங்கினர்கள்.

"நான் தற்காலிக ஒடிற்றர் ஜெனராலாகக் கடமை பார்த்த காலத்திலே என்னுடைய அறிக்கைகள் மூலமாக என்னுடைய வேலைத் திறமையை, என்னுடைய நாட்டுப் பிரதிநிதிகள் அறிந்திருப்பார்கள். இவர்கள் எங்கள் நாட்டிற் பிறந்தவர்கள்; ஜனங்களின் பிரதிநிதிகள: எனவே, நடுக் கண்டு நியாயம் வழங்குவர் என நான் எதிர்பார்த்தேன்; ஆனல் நடந்ததுஎன்ன? இலங்கையரையே உயர் பதவிகளில் வைக்கவேண்டும் என்ற அந்தக் கொள்கையை அவர்கள் காற்றிற் பறக்கவிட்டார்கள் ஓர் அந்நியரையே இறக்குமதி செய்யத் தீர்மானித்தனர்.

"ஆனல், இந்தவிவாதத்தின்போது நிகழ்ந்துள்ள விஷயங்கள் குறிப்பிடத்தக்கன ஓர் அந்நியரை இறக்குமதி செய்யக்கூடாது என்று வாக்களித்தவர்களில் எல்லாச் சிறுபான்மைப் பிரதிநிதிகளும் சேர்ந்து நின்றனர். அவர்களுடன் ஓர் சில சிங்களப்பிரதிநிதிகளும் சேர்ந்திருந்தனர். எனக்கு விரோதமாக நின்றவர்களில், பிரதம காரியதரிசியும் மிஸ்ரர் செனநாயக்காவும், அவர்மகன் டட்லியும் சேர்ந்துள்ளவர் என்பதும் இங்கேபிரதானமாகக் குறிப்பிடவேண்டியது.

"நான் செய்துள்ள பிழைகள் என்ன? என்கடமையைத் திறம்பட, முகான் பாராட்டாது நடுநீதி திறம்பாது செய்தது குற்றமா? 1944-ம் 45-ம் ஆண்டில் நான் விடுத்த அறிக்கைகள் நியாயமானவை, நீதியானவை என்றெல்லாம் அரசாங்கசபை பாராட்டியதே! நான் இந்தியாவிலே ஸ்ரீ கந்தாவலை என்பவருடைய அரிசி வாங்கிய வியவகாரம் சம்பந்தமாக விடுத்த அறிக்கையை, பகிரங்கக் கணக்குப் பரிசோதனைச் சபையினர் வெகுவாகப் பாராட்டினரே! அவர்கள் விடுத்துள்ள அறிக்கையின் 21வது பந்தியில் என்னுடைய சேவையைப் பாராட்டி, இப்படியான ஊழல்களைப் பகிரங்கப்படுத்தியதற்காக எனக்கு நன்றியும் [illegible] படி நன்றிபாராட்டியவர்களுள் இந்த டட்லி செனநாயக்காவும் சேர்ந்தவராவர்.

"அரசாங்க சபையிலே, எனக்கு விரோதமாக ஓர் அந்நியரைக் கொண்டுவர வேண்டும் என்ற தீர்மானம் விவாதத்துக்கு வந்தபோது நிகழ்ந்த சில சம்பவங்களையும் நான் குறிப்பிடாமலிருக்கமுடியாது. மத்தியானச் சாப்பாட்டு நேரத்தின்பின், விவாதத்தை நிறுத்தவேண்டும் என செனநாயக்காக் கோஷ்டி நின்றது: எனக்கு விரோதமாகப் பேசிய டட்லி செனநாயக்காவுக்குச் சரியானவிடை கொடுப்பதற்கு ஓர் அங்கத்தவர் வரவிருந்தார். ஆனல், அவரை உள்ளுக்கு வரவிடாமல் இடையில் மறித்து, அவருடைய கழுத்து நாடாவையும் பலாத்காரமாகபபறித்தார்கள். இப்படியான அக்கிரமமும் அன்றுநடந்ததை மகாஜனங்கள் அறியட்டும்.

"இப்படியான அநியாயம் ஏன், எதற்காக நிகழ்ந்தது? நான் தமிழன் என்றபடியினல். உயர்தர பதவிகளுக்கு ஆட்களை நியமிக்கும்போது வகுப்புப் பிரச்சினை எங்கள் இலங்கையரசாங்கத்தாற் கிளப்பப்படும் சம்பவங்கள் அநேகம் உண்டு. இலங்கைக்குப் புதிய ஓர் அரசியற்றிட்டம் வரவிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இப்படியான வகுப்புவாத ஊழல்கள் எங்கள் அரசியல் வியவகாரங்களிற் றலைகாட்டுவது உண்மையில் வருந்தத்தக்க விஷயமாகும்."

---

## இலக்கியம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

நன்கு சிந்தித்துப் பார்த்து இனியாவது தங்களுடைய சொந்த இலக்கியங்களைக் கற்றின்பமடைவார்களாக

இலக்கியங் கற்பிக்கும் ஆசிரியர்கள் தாங்கள் பன்முறை பயின்று சுவைத்தவற்றையே மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். தங்களுக்குச் சுவையளிக்காதவற்றைக் கற்பிப்பது பொருத்தமன்று. மேலும் மாணவர்களுக்கு இலக்கியத்தில் வெறுப்பையும் உண்டாக்கிவிடும். சில செய்யுள்களையாகுதல் திரும்பத் திரும்பப் படித்துச் சுவைக்கும் ஆர்வம் இல்லாத ஆசிரியர்கள் இலக்கியத்தைக் கற்பிக்கவேகூடாது.

"வான்கலந்த மாணிக்க வாசக
நின்வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து
செழுங்கழனித் தீஞ்சுவைகலந்து
ஊன் கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே"

இத்தகைய இனிமையைத் தாமும் அனுபவித்து மாணவர்களும் அனுபவிக்க அவர்களைவழிப்படுத்தற்கு இலக்கிய ஆசிரியர்கள் முயலவேண்டும்.

[இது பண்டிதர் கா பொ. இரத்தினம் B. A. (Hons) B O. L. அவர்கள், ஊவாமாகாணத் தமிழ் ஆசிரியர் விடுமுறைக் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் சுருக்

---

## அரசங்கம் என்பது யாருக்கு

3ம் பக்கத் தொடர்ச்சி

கிறார்கள். அதுமாத்திரமன்றி, அடுத்த அரசியலிலும் அவர்கள் அதிகாரம் வகிப்பாரானல், இந்த இலங்கைக்குக் கதிமோட்சமே கிடையாது என்று திடமாகக் கூறலாம். இவர்களின் அதிகாரம் ஒழியவேண்டும் இவர்களுடைய செல்வாக்கு மறையவேண்டும் இந்த இலங்கையின் அரசியல் வானத்திற் புதிய நட்சத்திரம் தோன்றவேண்டும். புதிய சகாப்தம் உதயமாகவேண்டும்.

●

### யாருக்கு அரசியல்

பொதுஜனங்களால், பொதுஜன நன்மைக்காகவே அரசியல் நிர்வகிக்கப்படுகிறதன்றி, ஒரு சிலரின் பதவி வேட்டையைப் பூர்த்தி செய்யவோ இன்னெருசிலரின் பட்டமோகத்தை நிறைவேற்றவோ, இன்னோர் சிலரின் பண மூட்டைகளை நிரப்பவோ ஏற்படுத்தப்படுகின்றதில்லை என்னும் ஓர் பெரிய உண்மையைப் பொதுமக்கள் உணரவேண்டிய காலம் சமீபத்தில் வந்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் உலகின் மற்றப் பாகங்களில் நிகழும் சம்பவங்களை ஊன்றிநோக்க வேண்டும். லட்சக் கணக்கானோரின் ரத்தத்தைப் பிழிந்து ஒருசிலரைமாத்திரம் வாழ்விக்க ஏதுவாகவிருந்த அரசியல் முறைகள் எல்லாம் நின்ற விடம்தெரியாமல் மறைந்துவிட்டன. இன்று பொதுமக்கள் ஆட்சியே உலகில் நிலவுகின்றதன்றி பதவி வேட்டுவர் ஆட்சி நிலவவில்லையென்பதை இலங்கைமக்கள் அவதானிக்கவேண்டும். இந்த இலங்கையிற்பிறந்து இந்த இலங்கையில் வளர்ந்து, இந்த இலங்கையில் இறக்கும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும், குழந்தையும், கிழவனும் இந்த நாட்டுப் பிரஜையே. ஒவ்வொரு பிரஜையும் தன் வாழ்வை மனரம்மியமாகக் கழிக்கச்செய்வது அரசாங்கத்தின் ஓர் பெரும் கடமையாகும். ஒருவன் பிறந்து இறக்கும்வரை அவனுடைய சுகதுக்கங்களுக்கு அவனுடைய நாட்டு அரசாங்கமே ஜவாப்தாரியாகும், இந்தப் பொறுப்பினின்றும் எந்த அரசாங்கமவது தப்பமுடியாது. 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்றார் எங்கள் வீரபாரதி. அதுதான் அரசாங்கத்தின் கடமை. உண்ண உணவில்லை, உடுக்கத் துணியில்லை, நோயுற்ற காலத்தில் வைத்தியர் இல்லை, மருந்துக்குப் பத்தியத்துக்கு வழியில்லை; தள்ளாத காலத்திற் சகாயமில்லை; இறந்தால் எடுத்துப் புதைக்க. அல்லது எரிக்க மார்க்கமில்லை என்று எவனுவது கவலையுற அரசாங்கம் விடமுடியாது. ஜனங்களே அரசாங்கம், அரசாங்கமே ஜனங்கள் என்ற நிலைமை ஏற்படவேண்டும். இப்போது ஜனங்களுக்காக அரசாங்கம் இல்லை. நேர்மாருக அரசாங்கத்திற் பதவி வகிதிருக்கும் ஒருசில மூட்டுப்பூச்சிகளின் சுபீட்சத்துக்காகவே இன்று ஜனங்கள் வாழுகின்றார்கள்!

---

சென்ற பல தினங்களாக நடக்கும் தென்னிந்தியப் புகைரத வேலை நிறுத்தத்தில் தலையிட்டு சமாசம் செய்து வைக்கும்படி இந்தியப் பிரதம மந்திரி பண்டிதர் ஜவஹர்லால் நேருவை வேலை நிறுத்தச் சபையின் காரியதரிசிகள் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

---


## தேவை

ஓட்டுமடம் ஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு மனேஜர் தேவை. சம்பளம் 60 ரூபா பிணைப்பணம் 300 ரூபாய், விண்ணப்பம் காரியதரிசிக்கு 15 9-46 ஞாயிற்றுக்கிழமைக்கு முன் அனுப்பப்படவேண்டும்.

K. K, காசிப்பிள்ளை,
காரியதரிசி.

T. முத்துச்சாமிப்பிள்ளை,
தலைவர்.

4-9-46. Mis 164 6, 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

### உப்புவரியை ஒழிக்க

இந்தியாவிலே உப்பு வரியை ஒழிப்பதற்காக மகாத்மா காந்தி தாண்டி உப்புச் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்ததும் அதன் பயனகப் பலர் சிறை சென்றதும் ஞாபகமிருக்கலாம். இப்போது இந்திய மத்திய அரசாங்கத்தில் பொதுஜன ஆட்சி நிகழ்வதால், இந்த அநியாயமான உப்பு வரியை ஒழித்தல் வேண்டுமென மகாத்மா காந்தி இப்போது செய்துள்ளார். அதன்படிக்கு உப்பு வரியை ஒழிப்பதற்குப் பண்டிதர் ஜவஹர்லால் நேரு ஓர் சட்டம் கொண்டுவர ஆலோசிக்கிறார் என்று தெரிகிறது. இப்போது உப்புவரி மூலம் இந்திய அரசாங்கத்துக்கு 8 கோடி ரூபா வருமானம் கிடைக்கிறது.

●

### தேசீயக்கொடி பறக்கிறது

பண்டிதர் ஜவஹர்லால் நேரு இப்போது இந்தியாவின் பிரதம மந்திரி: இன்று அவருடைய விடுதியிலே மூவர்ணத் தேசீயக்கொடி உல்லாசமாகப் பறக்கின்றது இத் தேசீயக் கொடியைக் காப்பாற்றுதற்காக எத்தனையோ வீரர்கள் உயிர் துறந்தனர். இன்று அதேகொடி அரசாங்க நிலையங்களிற் கெம்பீரமாகப் பறக்கிறது.

●

### சுபாஷ் போஸின்மீதுள்ள வழக்குகள்

சுபாஷ் சந்திரபோஸ் மீது இந்திய அரசாங்கம் விதித்துள்ள தடையுத்தரவுகள் தொடர்ந்துள்ள [illegible]க்குகள் எல்லாவற்றையும் நீக்கிவிடும்படி பண்டிதர் நேருகட்டளையிட்டார். சுபாஷ் சந்திரபோஸ், உயிருடன் இருப்பதானல் அவர்சுதந்திரபுருஷராக இனி இந்தியாவுக்குள் வருவதற்கு எவ்வித தடையும் இருக்கமாட்டாது. ஆனல் சுபாஷின் கதி என்ன? அவர் உயிருடன் இருக்கின்றாரா?

●

### பம்பாய்க்கலகம் ஓய்ந்தது

பம்பாய்க் கலகம் ஓய்ந்து விட்டது. முடிவான புள்ளி விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை யாயினும், இந்தக் கலகத்தால் 300 பேர் வரை இறந்தனர் என்றும் 700 பேர் காயமுற்றனர் என்றும் கணிக்கலாகும்.

●

### நேருவின் வேண்டுகோள்

சென்ற சனிக்கிழமை யிரவு பண்டிதர் நேரு ரேடியோ மூலம் இந்திய மக்களுக்கும் உலக மக்களுக்கும் ஓர் செய்தி விடுத்தார். தாம் அரசாங்கம் அமைத்ததையிட்டுப் பாராட்டுதற் செய்தியனுப்பிய சகலர்க்கும் அவர் நன்றி தெரிவித்து, இந்த அரசாங்கம் செவ்வனே நடைபெற அனைவரது ஆசியையும் ஒத்துழைப்பையும் வேண்டினர். ஆசியா மக்கள் அனைவரும் ஒன்ருகச் சேரவேண்டுமென்றும், ரூஷியாவும் இதிற் பங்கு பற்றவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். இங்கிலாந்துடனும் அதன் சாம்ராஜ்ய நாடுகளுடனும் நேசபான்மையுடன் இருப்பதே பாரதநாட்டின் லட்சியம் என்றும் அவர் தெரிவித்தார். ஆங்கிய நாடுகளில வசிக்கும் இந்தியர் விஷயமாக இந்திய அரசாங்கம் மிகவும் அநுதாபத்துடன் கருமம் ஆற்றும் என்றும் அயல் நாடுகளில் வதியும் இந்திய மக்களுக்கு அநீதி விளைக்கப்படுமானல் அதனை இந்தியா பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கமாட்டாது என்றும் பிரதம மந்திரி நேரு சபஷ்டமாகத் தெரிவித்துள்ளார்.

## விபரீத சினிமா

### பொய்யும் கற்பனையும் மலிந்தவற்றைத் தடுக்க வேண்டும்

நிகழும் ஆவணிமாதம் 12ந் திகதி (28-8-46 புதன்கிழமையன்று கொழும்பு விவேகானந்தசபையின் ஆதரவில் வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் இந்துமக்களின் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது அவ்வமயம் டாக்டர் த. நல்லநாதனவர்களால் பிரேரிக்கப்பட்டு, திரு. K. V. S. சுந்தரமவர்களால் அநுவதிக்கப்பட்ட பின் வரும் பிரேரணை சபையாரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

"இந்துசமய சம்பந்தமான சரித்திரங்களைக் காட்டுவதாகப் பாவனை பண்ணும் சினிமாப் படங்களுட் சில பொய்யும் கற்பனையும் பொதிந்த அம்சங்களைக் கொண்டனவாயும், நம் சமய உண்மைகளைத் திரிவு படுத்திச் சீர்கேடான முறையில் காட்டுவதனல் நம் சமயத்தையும் தெய்வத்தையும் இழிவுபடுத்திக் கேலிக்கிடமாக்குவனவாயும், பொதுமக்கள் ஒழுக்க நிலைக்குக் கேடு விளைப்பனவாயுமிருக்கின்றனவென, இந்துமக்கள் குழுமியுள்ள இப் பொதுக்கூட்டம் அபிப்பிராயப்படுகின்றது பொது நன்மையை உத்தேசித்து இவ்விஷயத்தில், இந்துமக்களின் சார்பாக விவேகானந்த சபையினரின் அபிப்பிராயத்தைப் பெறவேண்டுமெனவும், சினிமாப் படங்களைத் தணிக்கை செய்யும் தணிக்கைக் குழுவில் விவேகானந்த சபைப் பிரதிநிதிநிதி ஒருவரையோ சிலரையோ நியமித்தல் வேண்டுமெனவும் இக் கூட்டம் அதிகாரிகளை வேண்டுகின்றது,

'ஸ்ரீ வள்ளி" "வள்ளி திருமணம்" என்னும் சினிமாப் படங்கள் மிகவும் வெறுக்கத்தக்க அம்சங்களைக் கொண்டுள்ளனவாதலால் அவை காட்டப்படாது தடை செய்யப்படுதல் வேண்டுமெனவும் இக்கூட்டம் ஏகமனதாக அபிப்பிராயப் படுகின்றது"

'சைவ சமய மாண்பு' என்னும் பொருள்பற்றி அக் கூட்டத்தில் விரிவுரை நிகழ்த்திய பண்டிதபூஷணம் உயர்திரு. K. ஆறுமுகநாவலரவர்கள் இப் பிரேரணையை ஆதரித்துப் பேசினர்.

அடுத்த நாளாகிய வியாழக்கிழமையன்று (29-8-46) மேட்டுத் தெருவிலுள்ள விவேகானந்த சபை மண்டபத்தில் நிகழ்ந்த இந்துமக்கள் பொதுக்கூட்டத்தில் இதே தீர்மானம் அத்துவக்காத் திரு. A. C. நடராசா அவர்களால் பிரேரிக்கப்பட்டு வித்துவான் வ மு. கனகசுந்தரம் பிள்ளையவர்களால் அநுவதிக்கப்பட்டபின் சபையாரால் ஏகமனசாக அங்கீகரிக்கப்பட்டது. பண்டித பூஷணம் உயர்திரு. K. ஆறுமுக நாவலரவர்கள் இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசியபின் 'சிவமும் சக்தியும்' என்னும் பொருள்பற்றி ஓர் விரிவுரை நிகழ்த்தினர்.

விவேகானந்தசபையின் நிர்வாக சபையாரும் இதே விதமான ஓர் தீர்மானத்தைத் சென்ற கூட்டத்தில் நிறைவேற்றியிருக்குன்றனர்.

### பொய்ச் சாட்சி கூறியவருக்கு மூன்று மாதம்

ஊர்காற்றுறைப் பகுதியைச் சேர்ந்த வி. விஞசித்தம்பியைக் கொலைசெய்தார் என்று யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் குற்றஞ் சாட்டப்பட்ட பி. தர்மகுலசிங்கம் என்பவர் விசாரணை முடிவில் நிரபராதியாய்க் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். வழக்காளி பக்கத்தில் சாட்சியம் அளித்த T. இராசதுரை என்பவர் பொய்ச்சாட்சியம் அளித்தார் என்ற குற்றத்துக்காக மூன்று மாதக் கடுங்காவற் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

மல்லலம் புவனத்துள்ள மன்னுயிர்க் கணங்கட் கெல்லாம்
ஒல்லையின் மகிழ்ச்சி யெய்தி யுவகையின் குறிப்புண் டான
தொல்லையில் அவுண ருகுஞ் சூரனே முதலா யுள்ள
எல்லவர் தமக்கும் மாயு மிருங்குறிப் புற்ற வன்றாள்.

குமாரக்கடவுள் தோன்றியருளிய அத்தினத்தில், வளப்பம் பொருந்திய உலகத்திலுள்ள நிலைபெற்ற உயிர்களனைத்தினுக்கும் உடனே சந்தோஷமுண்டாகி (மேலும்) நன்மைக்காகிய அறிகுறிகளுண்டாயின; பழைமையுடைய அசுர குலத்தவனுகிய சூரபன்மன் முதலாகவுள்ள (அசுரர்கள்) அனைவருக்கும் கெடுதற்காகிய பல துன்னிமித்தங்கள் தோன்றின என்பது கருத்து.

சூரபன்மன் இப் பூவுலகத்தில் மாத்திரமன்றிச் சுவர்க்கவுலகம் முதலாகச் சொல்லப்பட்ட பதினன்குலகத்திலும் வசிக்கும் உயிர்களனைத்திற்கும் இன்னல் விளைத்தானுதலின், பதினன்குலகத்திற்கும் பொதுவாகவுள்ள புவனமென்னுஞ் சொல்லை இங்கே பிரயோகித்தாரென்க. பெருமான் திருவவதாரஞ் செய்யவே, உயிர்களெல்லாம் மகிழ்ச்சி யெய்தினவாதலானும், அம்மகிழ்ச்சியின் காரணத்தை அச்சமயத்தில் அவைகள் அறிந்திலவாதலானும் அவ்வுயிர்கட்கு அம்மகிழ்ச்சி 'சடுதியில்" தோன்றியதாதலானும், "ஒல்லையின் மகிழ்ச்சியெய்தி" யென்றார். 'ஒல்லையின்" என்பதனை "உவகையின் குறிப்புண்டான" "எல்லவர் தமக்கும்மாயு மிருங்குறிப்புற்ற" என்பவற்றொடுங் கூட்டிப் பொருள்கொள்க. இந்த மகிழ்ச்சியோடு தொடர்பாகவுள்ள உவகை நீடித்த காலம் நிலைபெறுமென்பதற் கறிகுறியாதலின், உவகையின் குறிப்புண்டான என்றார்; சூரபன்மன் நூற்றெட்டு யுககாலம் அரசு செய்தவனுதலின் "தொல்லையி லவுணருகுஞ் சூரன்" என்றார். இங்கே எல்லவரென்றது அசுரர் அரக்கர் முதலாந் தீயோரையென்க; மாயும் என்றசொல் ஈண்டு இரட்டுற மொழிதலாம். மாய என்னும் அடியாகப் பிறந்த மாய்தல் என்னுஞ் சொல்லுக்கு சாதல், மடிதல், மறைதல், வருந்துதலென்னும் பல பொருளகளுண்டாம் சுப்பிரமணியப் பெருமான் உய்த்த வேற்படையினல் சூரன், ஏனைய அசுரர்கள்போல் மாளாது, வடிவம் மாறிச் சேவலும் மயிலுமாகி முறையே பெருமானுடைய கொடியாகவும் வாகனமாகவும் பேறு பெற்றானுதலின், அச்சூரபன்மன் விஷயத்திலே பெருமான் அவனுக்கு மறக்கருணை புரிதலாகிய வருத்துதலைச் செய்து அவன் கொண்ட அசுரப் பிறப்பையும் வச்சிர யாக்கையையும் மறைத்தருளினாதலின், மாயும் என்பதற்கு வருந்தும் மறையும் எனப் பொருள்கொண்டு, ஏனைய அசுரர் விஷயத்தில் இறந்துபடுமெனப் பொருள்கொள்க இப்படியே சூரபன்மன் வதைப் படலம் என்பதில் வரும் வதையென்பதற்கு, ஏனையர் வதைப்படலங்களில் வரும் வதையென்னுஞ் சொல்லுக்குப் பொருள்கொள்வதுபோற கொல்லப்படுதலெனப் பொருள் கொள்ளாது, மறக கருணையாகிய வருத்துதலைச் செய்து, அவனுடைய ஆணவம் முதலாம் மலங்களைக் கெடுத்து, அவன் குலத்தையும வடிவத்தையும் மறைத்தமையெனப் பொருள்கொள்க. நன்னிமித்தம் வலத்தோள் துடித்தல் முதலியன. துன்னிமித்தம் இடத்தோள் துடித்தல் முதலியன, (95)

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினல் அளக்கொ ணமல்
நிறைவுடன் யாண்டு மாகி நின்றிடு நிமல மூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி யருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந் தருளி னானே.

வேதாந்தத்தினலும் வாக்கினலும் மனத்தினலும் அளவிடுதற்கரிய மலரகிதராகிய சிவபிரானே, ஆறு திருமுகங்களோடுகூடிய (சண்முக) மூர்த்தியாக எழுந்தருளி, சரவண வாவியின்கண்ணேயுள்ள வாசனையோடுகூடிய செந்தாமரைப் பூவின்கண்ணே வீற்றிருந்தருளினரென்பது கருத்து

பரமசிவனே சண்முக மூர்த்தியாக எழுந்தருளினரென்பதை இத் திருவிருத்தம் வற்புறுத்தியவாறும்; மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினலளக்கொணத...... நிமலமூர்த்தியென்பதை,

"உடலினூடு போய்மீளு முயிருனூடு மாயாத
உணர்வினூடு வானூடு—முதுதீயூ
டலவையூடு நீரூடு புவியினூடு வாதாடும
ஒருவரோடு மேவாத—தனிஞானச்
சுடரினூடு நால்வேத முடியினூடு மூடாடு
துரியவாகு லாதீத—சிவரூபம்
............................................................"

என வரும் அருணகிரிநாதர் திருவாக்கா லுணர்க. (96)

### இங்கும் நேரடிப்போராட்டமா?

இந்தியாவிலே ஜின்னுவின் தலைமையில் முஸ்லிம் லீக்கினர் காங்கிரசுக்கு விரோதமாக நேரடிப் போராட்டம் தொடங்குவது என ஆர்ப்பாட்டஞ் செய்து வருகிறார்கள். இந்த இலங்கையிலும், தொகுதி நிர்ணயச் சபை. முஸ்லீம்களுக்கு அநீதி விளைத்துவிட்டதால் தம நியாயமான உரிமைகளைப் பெறுதற்காக இங்கும் முஸ்லீம்கள் நேரடியாகப் போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டும் என்று சென்ற வியாழக்கிழமை நிகழ்ந்த காலி சோனகர் சங்கக் கூட்டத்தில் [illegible]ர் பேசினர்.

### கூப்பன் இல்லாத சேலைகள்

குறைந்த ரகத்தைச் சேர்ந்த சேலைகள் பெருந் தொகையிற் கையிருப்பி லிருப்பதாகத் தெரிகிறது. இவற்றுக்கு வழக்கமாகக் கொடுக்க வேண்டிய கூப்பன்களை ஜனங்கள் கொடுப்பதற்கு விருப்பமில்லா திருக்கிறார்கள். இதன்பயனக இச்சேலைகள் விற்கப்படாமல் இருக்கின்றன. எனவே இப்படியான குறைந்த ரகச் சேலைகளைக் கூப்பனில்லாமலே விற்க அனுமதிக்கவேண்டும் என்று துணிக் கட்டுப்பாட்டதிகாரி, கைத்தொழில் நிர்வாகசபைக்கு விண்ணப்பித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேர்பெற்ற பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகள்

உலகப் பிரசித்திபெற்ற, திறமானவையும், நன்மதிப்பு உள்ளவையும், பேசல் மிஷன கலிக்கற் ஓடுகளே. மிகக் குறைந்த தண்ணீரை உறுஞ்சுவன. கடைகளில் விலைப்படும் பலதினிசு ஓடுகளையும் நிறுத்துப்பார்த்துத் தண்ணீருள் நனையவிட்டுபின்னும் நிறுத்து எது கூடிய தண்ணீரை இழுக்குமெனப் பரிசோதித்துப் பாருங்கள். தற்கால நிலைமைக்கும். தேவைகளுக்கும் ஏற்ற ஒரு புதுமாதிரி இவ்வோடுகள் செருகு விழிம்பும், இரட்டைப் பீலிடும் உள்ளனவாய்ச செம்யபபட்டு இக்காலத்தில் அதிகமாய் உபயோகிக்கப் டுகின்றன. இலைத் தேசத்தில் விலைப்படும் ஓடுகளுள் இவைகளே முதன்மை பெற்றன. வாங்கத் தீர்மானிக்குமுன் இவ்வோடுகளை ஒருதரம் பாருங்கள், கவனியுங்கள். மற்றைய ஓடுகளில ஏமாந்து நட்டப்படாதீர்கள்

வேறு சாதி ஓடுகளைப்போல வழக்கமான தனிப் பீலி ஓடும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வில்லியம் மேதர் அன்சன்ஸ், தனி ஏசன்ட்

(Misc. 250—19-3-46—19-9-46) (செ) 1888 ம் ஆண்டு முதல்.

## ஜீவாதார வைத்திய விளம்பரம்

காலை 8 மணி தொடக்கம் 11 மணிவரை
மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை
ஒருமனதுடன் வந்து
நற்சுகத்தைப் பெறுங்கள்

பைத்தியம், மேகச்சூடு, சலரோகம் இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்தி வரவேணும்.

இங்ஙனம்
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
புதுக்கோவிலடி, கொக்குவில்.

(Mis 160 30-8—30-11-46)

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் செப் 11

7.15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 திருவாளபத்தூர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 குரல்வகை 8.30 டி வி நமசிவாயம் பாட்டு 9 முடிவு.

12 பாட்டுககொரு புலவன் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 கே ஆர் வெங்கடாசலம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 வேலன் (சுப்பிரமணிய பாரதி பாடல்கள்) 2.15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு

மாலை 5 திருவாளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை வயலின் 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 வெண்ணிலா 7.30 தமிழில் செய்திகள் 7.45 நபது காரல்ப்பெட்டி 8 ஆலத்தூர் சகோதரர்கள் பாட்டு 8.30 மதராஸ் 1ல் உள்ளபடி (டி கே பட்டம்மாள் பாட்டு) 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 கிச்குத் தெரியாத காட்டில் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 மதராஸ் 1ல் உள்ளபடி 10.30 முடிவு.

### வியாழன் செப் 12

காலை 7.15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 எஸ் வைத்தியப்ப ஓதுவார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 எம் எஸ் சுப்புலட்சுமி இசைத்தட்டு 8.30 டி கே நடராஜ பாகவதர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 டி கே நடராஜபாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 டி கே நடராஜ பாகவதர் பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 எம் எஸ் காளியமர்தன் வீணை 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 எஸ் வைத்தியப்ப ஓதுவார் பாட்டு 7.15 இலக்கியவாசகம் 7.30 தமிழில் செய்திகள் 7.45 எம் கே கோவிந்தராஜு பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 சிலப்பதிகார நாடகம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 எம் எஸ் காளியமர்த்தன் வீணை 10.30 முடிவு

### வெள்ளி செப்டம்பர் 13

காலை 7.15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 எஸ் சீதாலட்சுமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்தியகோஷ்டி 8.30 திருக்கோடிகாவல் ஆர் கோவிந்தராஜுபிள்ளைபாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 எஸ் சீதாலட்சுமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 எஸ் சீதாலட்சுமி பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு

மாலை: 5 சிதம்பரம் வி கோவிந்தசாமி பிள்ளை நாகஸ்வரம் 5.40 புராண-வரீ விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 மழுனி விஜயலட்சுமி இசைத்தட்டு 7.15 செய்தி விளக்கம் 7.30 தமிழில் செய்திகள் 7.45 சிதம்பரம் வி கோவிந்தசாமிப்பிள்ளை நாகஸ்வரம் 8.30 திருக்கோடிகாவல் ஆர் கோவிந்தராஜு பிள்ளை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 வீணை வயலின் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 உலக வர்த்தகங்கள் 10 ... 10.30 முடிவு.

## கந்தசாமி வைத்தியர்
### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக்கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிதரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேசத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும் கருவை அழியாமல் காக்கும் பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம், சிறியவர்கள் கால் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் ருத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 27 26-4—25-10 (செ)

## பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:
**க. ஆறுமுகம்பிள்ளை**
நெ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)




எங்கும்
கியாதிபெற்ற
எமது
ரேடியோ பீடிகளையே
எப்பொழுதும்
உபயோகித்து
ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:
எல்லாஊர்களிலும் கிடைக்கும்
மொடேண் ஏஜென்சீஸ்,
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)

வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்
### வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புதவெற்றி

இப்போதுள்ள பொலிசிகள் ரூபா 700,00,000—00 மேற்பட்டது
இதுவரை கொடுபட்டதொகை ரூ 113,00,000—00 ,,
இப்போதைய இருப்பு ரூபா 170,00,000—00 ,,
1944ம் ஆண்டு வருஷாந்த வருமானம் 39,45,103—00 ,,

அயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது
இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை
நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கோடுக்கப்படும்
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, டொன் கரலிஸ் கட்டிடம்,
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday September, 10, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org